இரண்டாயிரம் பேர்கள் இருந்தால் 100, 150 பேர்களுக்குத்தான் இடம் கிடைக்கும். 150 பேர்களுக்கு ஸ்டைபன்ட் கொடுப்பதால் பிரச்னை தீர்ந்துவிடாது. அது வரவேற்கத்தக்கதல்ல.

இவ்வளவு விவரமாக இதற்கான பதிலைச் சொன்ன பிறகு—அரசு நல்லெண்ணத்தோடு மனை மருத்துவர்களாக இருப்பவர்களுக்கு மேலும் 25 ரூபாய் உதவித்தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு இசையும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்த பிறகு—மாணவர்கள் வேலைநிறுத்தத்தை கைவிட, உடனடியாக அவர்கள் பெறவேண்டிய முழுப் பயிற்சியைப் பெற எதிர்க்கட்சித் தலைவர்களும் உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு அவர்கள் நல்லெண்ணத்தைக் காட்டும் வகையில்—அவர்கள் நல்லெண்ணத்தை நம்பிக் கொண்டிருக்கிறேன்—இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை வலியுறுத்தமாட்டார்கள் என்று எதிர்பார்த்து அப்படி வலியுறுத்த அவசியம் இல்லை என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் கொடுத்த நீண்ட விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால், இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

5. அமைச்சரின் அறிக்கை.

ஒரு துணை வினாவிற்கு 28—2—1975-ம் நாளன்று தாம் அறிவித்த விடையைச் சரி செய்து கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் அளிக்கும் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 82-எ கீழ் மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் 28—2—1975-ம் நாளன்று 101-ஆம் எண் வினாவிற்கு, திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களால் எழுப்பப்பட்ட துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையைச் சரி செய்து, இங்கே ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

1975 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 28—2—1975-ம் நாளன்று 101-ம் எண் உடுக் குறியிட்ட சட்டப் பேரவை வினாவைத் தொடர்ந்து திரு. பொன்னப்ப நாடார், அவர்கள் கேட்ட துணை வினாவிற்கு நான் பதிலளிக்கும்போது கீழ்க்கண்டவாறு கூறியுள்ளேன்.

"நாலைந்து ஆண்டு காலத்திற்கு முன்னால் இந்த போர்டு இங்கு ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை அமைக்க வேண்டுமென்ற கருத்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு பல்கலைக் கழக மானியக் குழுவுக்கும் அனுப்பப்பட்டது. பொறியியல் கல்லூரி, தொழில் நுட்பப் பணிகள் முழுமையும் இந்தப் பல்கலைக் கழகத்தின் கீழ் வந்தால்தான் எல்லாத் தொழில் நுட்ப வல்லுநர்களும், பொறியியல் வல்லுநர்களும் ஈடுபட்டு அதிகக் கவனம் செலுத்த முடியும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது ஆனால் யு.ஜி.சி. ஒரு கல்லூரியை மட்டும் அந்தப் பல்கலைக் கழகத்தின் கீழ் எடுத்துக் கொள்ளுங்கள், மற்றைய கல்லூரிகளை அபிலியேட் செய்யக் கூடாது என்று சொல்லிற்று. ஒரு பொறியியல் கல்லூரியை மட்டும் இந்தப் பல்கலைக் கழகத்தின் கீழ் வைத்துக் கொண்டு மற்றைய பொறியியல் கல்லூரிகள் எல்லாம் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இருந்தால் அதற்கும் இதற்கும் வேறுபாடுகள் வரும், இதைப்பற்றி பலமுறை வற்புறுத்தி எடுத்துச் சொல்லியும், மத்திய அரசும், யு.ஜி.சி.யும் ஏற்றுக்கொள்ளவில்லை ஆகவே. இப்போதைக்கு கிண்டியில் இருக்கும் பொறியியல் கல்லூரியை தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் மற்றவற்றை இணைத்துக் கொள்ளலாம் என்ற அளவுக்கு அதற்காவது அனுமதி தாருங்கள் என்று கேட்கப் பட்டிருக்கிறது. அதுபற்றிய பதில் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது" என்று குறிப்பிட்டேன். நான் இப்படி குறிப்பிடுவதற்கு முன்னாலேயே ஒரு தகவல் வந்து இருக்கிறது. அது என் பார்வைக்கு வரவில்லை. அதாவது, "தமிழ் நாட்டில் ஒற்றை வகை (யுனிடரி டைப்) தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்று தொடங்க கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து 1975-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து இவ்வரசுக்குப் பதில் வந்துள்ளது. மேலும் சென்னை பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கீழ்க்கண்ட நிறுவனங்களை புதிய பல்கலைக் கழகத்துடன் இணைக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளது.

இராசயன நுட்பவியல் துறை, தோல் நுட்பவியல் துறை, நெசவு நுட்பவியல் துறை, சிற்பம் மற்றும் நகரமைப்பு கலைத் துறை, ஆகியவற்றையும் அதோடு இணைத்து பல்கலைக் கழகம் துவங்க கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

அது குறித்து சென்னைப் பல்கலைக்கழகத்தின் கருத்து அறிய, அதன் ஒப்புதலைக் கோரி இவ்வரசு எழுதியுள்ளது" என்று மாற்றிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6. 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண். 15—காவல் துறை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

“நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 26,47,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்”.

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss about the increase in the number of crimes in the State, I move—

"That the allotment of Rs. 26,47,68,000 under Demand No. 15—Police—be reduced by Rs. 100."

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss about the cases of excesses in police stations manned especially by new recruits, I move—

"That the allotment of Rs. 26,47,68,000 under Demand No. 15—Police—be reduced by Rs. 100."

THIRU N. DENNIS: Sir. to discuss about the political interference in the Police administration, I move—

"That the allotment of Rs. 26,47,68,000 under Demand No. 15—Police—be reduced by Rs. 100."